# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2021–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 10–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

## அசல் வழக்கு எண் 199/2020

## (CNR No. TNSA-13000-280-2020)

தனபாக்கியம், வயது 72, க/பெ. லேட். திருமலை செட்டியார்,
வசிப்பது மாரியம்மன் கோயில் பின்புறம்,
நாகியம்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல்,
கெங்கவல்லி வட்டம், சேலம் மாவட்டம். .. வாதி

எதிராக

1. கணேசன், வயது 45, த/பெ. ராமராஜ்,
2. விஜயலட்சுமி, வயது 38, க/பெ. கணேசன்,

1 மற்றும் 2 பிரதிவாதிகள் வசிப்பது
ஆத்தூர் மெயின் ரோடு,
நாகியம்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல்,
கெங்கவல்லி வட்டம், சேலம் மாவட்டம். .. பிரதிவாதிகள்

| | | | |
|---|---|---|---|
| வழக்கு நாள் | : 06.11.2020 | மொத்த வழக்கு மதிப்பு | : ரூ.1,000/– |
| வழக்கு மூலம் | : 01.11.2020 | பிரிவு 27(c)–ன் கீழ் செலுத்தப்பட்ட | |
| அன்று நாகியம்பட்டி கிராமத்தில் | | நீதிமன்ற கட்டணம் | : ரூ.30.00 |
| ஏற்பட்டது. | | | |

தாவா சொத்துக்களை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எந்தவித இடைஞ்சல், தடங்கலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 06.11.2020 அன்று தாக்கல் செய்யப்பட்டு, அதே தினம் இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 04.12.2021 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. T. சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ராஜேஷ்கண்ணா அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு பதிலுரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், வாதி தரப்பை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்பாணை</u>

| | |
|---|---|
| 1. | இறுதியாக, நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு அனுமதிக்கப்படுகின்றது. |
| 2. | முடிவில், வாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ தாவா சொத்தினை அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு 1, 2 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, யாரும் எந்தவித இடைஞ்சல், தடங்கலும் செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| 3. | வாதிக்கு பிரதிவாதிகள் தாவா செலவுத் தொகையாக ரூ.1040.25–ஐ செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகின்றது. |

## செலவுப்பட்டியல்

| விபரம் | வாதி<br>ரூ. |
|---|---|
| பிராது ஸ்டாம்பு | 30.00 |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | 5.00 |
| தஸ்தாவேசுகளுக்கு ஸ்டாம்பு | 35.00 |
| வக்கீல் பீஸ் மூத்த வழக்கறிஞர் | 500.00 |
| இளைய வழக்கறிஞர் | 150.00 |
| புரோசஸ் கட்டணம் | 120.25 |
| நகல் செலவு | 100.00 |
| எழுத்துக் கூலி | 100.00 |
| **மொத்தம்** | **1040.25** |

## DESCRIPTION OF SUIT PROPERTIES

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், நாகியம்பட்டி கிராமம், ச.எண். 291/1 புஞ்சை ஏக்கர் 1.05 செண்ட் பூராவும். ஷ சர்வே எண்ணில் உள்ள கிணர் 1 பூராவும், ஷ கிணற்றில் இணைக்கப்பட்டிருக்கும் 3 எச்.பி. மின் மோட்டார் பம்பு செட் பூராவும் மற்றும் ஷ கிணற்றில் இணைக்கப்பட்டிருக்கும் சர்வீஸ் 204−ம், ச.எண்.279/12 புஞ்சை ஏக்கர் 0.08 செண்டில், ரோட்டுக்கு மேற்கு, நாச்சப்படையாச்சி நிலத்திற்கும் தெற்கு, கிழக்கு, வடக்கு இதன் மத்தியில் 0.07 செண்ட் நிலமும், ஷ சர்வே எண்ணில் உள்ள கூரை கொட்டகை ஒன்றும், மற்றும் மேற்படி சொத்திற்கு போக வர உள்ள சகல மாமூல் வழிநடை வண்டித்தட பாத்தியங்களும், கிணற்று நீர் பாயும் மாமூல் வாய்க்கால் வழிவரப்பு பாத்தியங்களும்,

இன்னும் இதற்குண்டான சகல விதமான ஈஸ்மெண்ட் சுதந்திர பாத்தியங்களும் உள்பட பூராவும்.

10.12.2021–ம் நாளன்று எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஓம். G. யவுராஜ்)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

ஆத்தூர்.

**PARTICULARS OF IMMOVABLE PROPERTY**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR.**

**O.S. No. 199/2020**

Dhanabakkiyam .. Plaintiff

Vs.

1. Ganesan
2. Vijayalakshmi .. Defendants

**Valuation of immovable property for Purpose of court fees.**

| ***Section and sub section of the Act*** | ***Nature of suit*** | ***Annual revenue of rent payable*** | ***Market value Rs. P.*** | ***Value for purpose of court fees Rs. P.*** |
|---|---|---|---|---|
| U/s. 27(c) of TNCF Act | Suit for Permanent Injunction | -- | 1000.00 | 30.00 |

Dhanabakkiyam
Plaintiff

Sd/- T. Subbarayan
Counsel for the Plaintiff

/ By order / True copy /
(Sd/-).
SUPERINTENDENT